செ.வெ.எண்:03/மே/2019 நாள்:06.05.2019

**தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்புமற்றும்பயிற்சித்துறை**

**தொழிற் பயிற்சி நிலையங்களில் (ITI) சேர்க்கை அறிவிப்பு**

**அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் துணை இயக்குநர்/முதல்வர் திருமதி.பி.பரமேஸ்வரி அவர்கள் தகவல்.**

--------------------

அரசு தொழிற் பயிற்சி நியைஙகளில் சேரவும், அரசு உதவி பெறும் தனியார் தொழிற் பயிற்சி நிலையஙகள் மற்றும் சுயநிதி தனியார் தொழிற் பயிற்சி நிலையஙகள் ஆகியவற்றில் அரசு ஒதுக்கீடு இடஙகளில் சேர்ந்திடவும் மாவட்ட கலந்தாய்வு மூலம் நடைபெறும் மாணவர்கள் சேர்க்கைக்கான விண்ணப்பஙகள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக வரவேற்கப்படுகின்றன.

தொழிற் பயிற்சி நிலையஙகளில் ஆகஸ்ட் 2019 மாதம் முதல் தொடஙகும் பல்வேறு பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் சேர்ந்து பயிற்சி பெற 8–ம் வகுப்பு தேர்ச்சி, 10–ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் 12–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். தமிழகத்தில் உள்ள தொழிற் பயிற்சி நிலைய விவரஙகள், தொழிற் பிரிவுகள், இவற்றிற்கான கல்வித் தகுதி, வயது வரம்பு, இட ஒதுக்கீடுஆகியவை இணையதளத்தில் உள்ள விளக்க கையேட்டில் ( Prospectus) தரப்பட்டுள்ளன. 31.05.2019 ம் நாள் கடைசி நாளாகும்.

03.05.2019 முதல் மேற்கண்ட இணையதளத்தில் விண்ணப்பம் மற்றும் விளக்க கையேட்டினை மாணவர்கள் பார்வையிடலாம். மாணவர்கள் இணையதளத்தில் கொடுத்துள்ள அறிவுரைகளை கவனமாக படித்து புரிந்து கொண்டு விண்ணப்பத்தை பூர்த்தி செய்து இணையதளத்தில் சமர்ப்பிக்க வேண்டும்., விண்ணப்பத்தில் எந்த மாவட்டத்தில் கலந்தாய்வில் கலந்து கொள்ள விரும்புகிறார்கள் என்ற விவரம் குறிப்பிட வேண்டும். ஒரு மாணவர் விரும்பினால் பல மாவட்டஙகளில் தொழிற் பயிற்சி நிலைய சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலம். ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனி விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டும். மதிப்பெண் அடிப்படையில் மாவட்ட கலந்தாய்வுக்கான நிகழ்ச்சி நிரலும் இதே இணையதளத்தில் பின்னர் வெளியிடப்படும். இணையதளத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்த தொழிற் பயிற்சி நிலையஙகளில் மாவட்ட கலந்தாய்வு நடைபெறும் என்ற விவரம் தரப்பட்டுள்ளது. அந்த நிகழ்ச்சி நிரலின்படி மாணவர்கள் Single Window முறையில் தாஙகள் சேர விரும்பும் தொழிற் பிரிவு மற்றும் தொழிற் பயிற்சி நிலையம் ஆகியவற்றை மாவட்ட கலந்தாய்வில் கலந்து கொண்டு தேர்வு செய்யலாம். இவ்வாறு அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் துணை இயக்குநர்/முதல்வர் திருமதி.பி.பரமேஸ்வரி அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.